# சமணர்கள் கூறும் இல்லறத்தாரின் ஒழுக்கங்கள்

**சு.முருகலட்சுமி & திரு.வி.கோபிநாத்**
**அறிவியல் உளவியல் துறை உதவி**
**பூ.சா.கோ.அர கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி ,கோவை.**

15

**ஆய்வுச் சுருக்கம்** :

சமயம் என்றால் எல்லோரும் ஒற்றுமையோடு ஒருவருக்கொருவர் உதவி வாழ்வதும் கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும். உலகத்தில் பல்வேறுப்பட்ட மக்கள் பலச் சமயங்களை பின்பற்றி வருகின்றனர் , அதில் ஒன்றுதான் சமண சமயம். சமண சமயம் பல கருத்துக்களை கூறியுள்ளது. அவற்றுள் சமணர்கள் பின்பற்றும் இல்லற ஒழுக்கங்கள், அவற்றின் காரணம் பற்றியும் ஆராய்வதே இந்த ஆய்வு கட்டுரை.

**ஆய்வு நோக்கம் :**

சமண சமயம் பின்பற்றும் இல்லறத்தாரின் ஒழுக்கங்களையும் அதன் காரணத்தையும் உணர்த்துவதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**கடவுச்சொற்கள் :**

சமணர்கள் - இல்லத்தாரின் ஒழுக்கங்கள் - கொல்லாமை – பொய்யாமை - கள்ளாமை பிறர் மனை விரும்பாமை - பொருள் வரைதல் - கள் உண்ணாமை - ஊன் உண்ணாமை - தேன் உண்ணாமை - பெரியோரை வணங்குதல்.

**முன்னுரை :**

சமயம் என்பது எல்லோரும் சமம் என்ற எண்ணத்தோடு ஒத்தும் ஒருவருக்கு ஒருவர் உதவியும் வாழ்வது ஆகும், மேலும் சமயம் என்பது இறை, உயிர், உலகம் பற்றிய ஒரு நம்பிக்கை முறை எனவும் கூறலாம். கடவுள் நம்பிக்கை அல்லது கடவுள் எழுந்தருளி இருப்பதை ஏற்கின்ற ஒன்றை சமயம் என்பர். கடவுள் மேல்கொண்ட நம்பிக்கையினால் அதன் தொடர்பான சடங்குகளையும் குறிக்கும் சொல் தான் சமயம் அல்லது மதம் என்கின்றனர்.

உலகத்தில் பல சமயங்களை நாம் பின்பற்றியும் வழிபட்டும் வருகிறோம். அவரவர் நம்பிக்கைக்கும், கலாச்சாரத்திற்கும் ஏற்ப சமயங்களை பின்பற்றுகிறோம். அவற்றுள் ஒன்றான சமண சமயத்தில் கூறப்பட்டுள்ள இல்லறத்தாரின் ஒழுக்கங்களைப் பற்றி எடுத்துரைப்பதே இந்த ஆய்வு கட்டுரை.

**சமண சமயத்தின் வரலாறு :**

சமண சமயத்தைத் தோற்றுவித்தவர் மகாவீரர். இவரின் இயற்பெயர் வர்த்தமானர். இவரின் காலம் கிமு 539. சமண சமயம் ஆறாம் நூற்றாண்டில் இந்து மதத்திற்குள் ஒரு சீர்திருத்த இயக்கமாக தொடங்கியது. மகாவீரர் சமண சமயத்தின் 24 ஆவது தீர்த்தங்கரர் ஆவார். சமணர் என்ற சொல்லிற்கு

சமணம், அமணம், அமண என பல பொருள் தருகின்றது. சமண சமயம் ஆன்மாவும் உலகமும் அனாதி நித்தியமென்றும் முற்றத் துறந்து வாழ்தலை முத்தி என்றும் கூறுபவர்கள். சமண சமய காலகட்டத்தில் பல நூல்களை தமிழர்கள் தொகுத்துள்ளனர். அதிலும் ஐம்பெரும் காப்பியங்களில் மூன்று சமந்த சமயம் சார்ந்தவையாக திகழ்கிறது. அவை சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி அதே போல் ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமண சமயத்தை சார்ந்தவை ஆகும்.

**சமணர்கள் கூறும் பத்து இல்லத்தாரின் ஒழுக்கங்கள் :**

சமணர்கள் தங்கள் நூல்களில் பல ஒழுக்கங்களையும் உலகத்திற்கு கூறியுள்ளனர் அவற்றுள் இல்லத்தாரின் ஒழுக்கங்கள் பற்றி கீழ்காணும் இல்லத்தாரின் ஒழுக்கம் என்பது குடும்பம் அல்லது கணவன் மனைவி இருவரும் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் ஆகும். அவை:

1. கொல்லாமை - பிற உயிர்களை கொலை செய்யாமல் இருத்தல்.
2. பொய்யாமை - பொய் பேசாமல் உண்மையை மட்டும் உரைத்தல்.
3. கல்லாமை - பிறர் பொருளை களவாடாமல் இருத்தல்.
4. பிறர் மனை விரும்பாமை - பிறர் மனைவியை மனதால் கூட நினைக்காமல் இருத்தல்.
5. பொருள் வரைதல் - அளவாக பொருளை சேர்த்தல்.
6. கள் உண்ணாமை - மது அருந்தாமல் இருத்தல்.
7. ஊன் உண்ணாமை - இறைச்சி உண்ணாமல் இருத்தல்.
8. தேன் உண்ணாமை - தேன் உண்ணாமல் இருத்தல்.
9. இரவு உண்ணாமை - இரவு நேரத்தில் உண்ணாமல் பகல் நேரத்தில் மட்டும் உண்ணுதல்.
10. பெரியோரை வணங்குதல் - தீர்த்தங்கரர் உள்ளிட்ட பெரியோரை வணங்குதல்.

**கொல்லாமை :**

**" கொல்லாமை யேஅறத்தின் கூரணி"**

**(சீவகசிந்தாமணி அணியறுபது11)**

கொல்லாமை என்பது பிற உயிர்களை கொள்ளாமல் இருப்பது சமண சமயத்தின்படி பிற உயிர்களுக்கு தெரியாமல் கூட தீங்கு விளைவிக்க கூடாது என்கின்றன. அதற்காக அவர்கள் தங்களையே சில நேரங்களில் வருத்திக் கொள்வர். தலை முடிகளில் இருக்கும் நுண்ணுயிர்கள் இறந்து விடக்கூடாது என்பதற்காக சமணர்கள் தங்கள் கைகளாலேயே முடியை அகற்றுவர். மலைப்பகுதி இல்லாத இடங்களில் கூட ஊதியைக் கட்டி அவ்வுறியில் வசித்தமையால் "உறியிற் சமணர்" என அழைக்கப்பட்டனர். காற்றில் இருக்கும் நுண்ணுயிர்கள் மூச்சோடு உச்சன்று இறந்து விடக்கூடாது என்பதற்காக மூக்கை திணை கொண்டு மூடி இருப்பர். இவ்வாறு குடும்ப வாழ்க்கையிலும் மனிதர்கள் தங்களின் சொற்களாலும் செயலாலோ பிறரை தெரியாமலும் தெரிந்தும் கூட கொல்லக்கூடாது என்கிறது சமயம்.

**பொய்யாமை :**

**" பொய்யாமை பொய்யாமை ஆற்றன் அறம்பிற**

**செய்யாமை செய்யாமை நன்று (297)**

**( 297 துறவறவியல் திருக்குறள்)**

என்கிறார் திருவள்ளுவர் பொய் சொல்லாமல் ஒருவன் வாழ்ந்தால் பிறர செயல்களை செய்யாமல் இருந்தாலும் அது அவனுக்கு நன்மையை தரும். அதேபோல் தனக்குத் தானே உண்மையாக இல்லாதவர் அவருக்கு அவர் எதிரியாகி விடுவார்கள் மனதளவில் பொய்யற்றவர் அனைவரது மனதிலும் இருப்பர் இதுவே தானமா தவம் கடந்து மேலானது.

நீராடுவது உடலை தூய்மைப்படுத்தவது போல் உண்மையை பேசுவது அகற்றை தூய்மைப்படுத்தும் வாழ்க்கையில் புறத்தூய்மை விட அகத்தூய்மையின் பங்கு அதிகமாக இருக்கும் இல்லற வாழ்க்கையில் அகத்தூய்மை இருந்தால் தான் இல்லற வாழ்க்கை மென்மேலும் வளரும் என்கிறது சமண சமயம்.

**கள்ளாமை :**

"பொய்கொலை களவு காம
மவிருள் புகாது போற்றிச்
செய்தவ நுனித்த சீலக்
கனைக்கதிர் திங்களொப்பர்"

(சீவகசிந்தாமணி2824 முத்தி இலம்பகம்)

பொய்,கொலை,களவு என்ற ஆசை என்னும் இருள் போகாமல் அதனை தடுத்து தவம் செய்பவர்கள் போற்றக்கூடியவர் என்கிறார் திருத்தக்கதேவர். களவு என்பது பிறர் பொருளுக்கு ஆசைப்படாமலும் பிறர் பொருளை அவர்கள் அனுமதியின்றி எடுப்பாதே ஆகும். களவு என்பது பொருள்களை மட்டும் களவாடுவது அல்ல. இதை இல்லற வாழ்க்கையில் எப்படி கூறுகின்றார்கள் என்றால் மனைவியின் அனுமதியின்றி அவரின் கற்பிற்கு தீங்கு விளைவிப்பதும் ஒரு வகையான களவுதான். ஆதலால் கணவன் மனைவி இடையே உள்ள இல்லற வாழ்க்கையில் இந்த கள்ளாமை இருக்க வேண்டும். அதேபோல் பொய் கொலை, களவு, செய்யாமல் இருப்பவர்கள் செய்யும் தவமே சிறந்தது என்கிறார்கள் சமனர்கள்.

**பிறர்மனை விரும்பாமை :**

**செம்மையொன் றின்றிச் சிறியாரினத்தராய்க். கொம்பை வரிமுளையாள் தோள்மரீஇ - உம்மை வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே - இம்மை அலியாகி ஆடிஉண் பார்.**

(நாலடியார் சமண முனிவர்கள் )

என்கிறார்கள் சமண முனிவர்கள். இந்த பாடலில் நல்ல குணமின்றி கீழெண்ணம் கொண்டவர்களோடு சேர்ந்து பெண்களின் தோளிலே முயங்க விரும்பி ஒருவன் இப்பிறவியில் தன்னுடைய செல்வம், வலிமை முதலியவற்றால் மற்றவர் மனைவியை விரும்புபவனாக இருந்தால் மறுபிறப்பில் அவன் ஆணும் பெண்ணும் இல்லாமல் கூத்தாடி வயிறு பிழைக்க நேரிடும் என்று நாலடியாரில் சமண முனிவர்கள் கூறியுள்ளனர். இல்லத்தாரின் ஒழுக்கங்களில் மிக முக்கியமானது

பிறர்மனை விரும்பாமையாகும். அறத்தின் இயல்போடு பொருந்தி இல்வாழ்க்கை வாழ்பவன் பிறருக்கு உரியவனின் பெண்மையை விரும்பாதவனே ஆவான். பிறர் மனைவியை மனதால் கூட நினைத்துப் பார்க்காதவர்கள் இல்வாழ்வில் நல்லொழுக்கங்கள் கொண்டு வாழ்பவர்கள் ஆவார்கள்.

**பொருள் வரைதல் :**

" அருளும் அரசனும் ஆணையும் தேரும் பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரின் மறுளும் பிணையவன் மாதவ மன்றே.

**( திருமூலர் 168)**

இந்த மந்திரத்தில் திருமூலர் , நாட்டையே ஆளும் அரசனாக இருந்தாலும் அவனிடம் உள்ள எந்த செல்வமும் நிலையற்றது. ஆதலால் நிலையில்லாத இந்த செல்வம் மேல் ஆசை வைக்காமல் செல்வத்திற்கும் மேலான செல்வமான இறைவனின் திருவடியை பற்றிக்கொள்ள வேண்டும் என்கிறார். தமிழ் சமண இலக்கியத்தில் பல இடங்களில் மிகுப்பொருள் விரும்பாமை பற்றி கூறியுள்ளனர். மிகுப்பொருள் விரும்பாமையை ஒரு அறமாகவும், இல்லத்தார் ஒழுக்கமாகவும் வலியுறுத்தியது சமண சமயம் தான். சமூகத்தில் ஒரு சாரிடம் மட்டும் பொருள் சேர்ந்துக் கொண்டிருந்தால் சமூகத்தின் நிலைமை சீர்குலையும் என்ற எண்ணத்தோடு இருப்பவர்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த ஒழுக்கத்தை அல்லது அறத்தை ஏற்படுத்தியுள்ளனர் சமணர்கள்.

**கள் உண்ணாமை :**

" காமமும் கள்ளும் கலதி கட்கே ஆகும்"

**( திருமூலர் 324)**

காமமும் கள்ளும் தீய குணமுடைய கீழோர்களுக்கு உரியது. கள் உண்பதால் தொன்மலத்தையும், சமண மயக்கத்தையும் உண்டாக்கும். அது மட்டுமல்லாமல் கள்ளுண்பதால் நல்ல அறிவையும் அது போக்கும் என்கிறார் திருமூலர். கள் உண்பதால் ஒருவன் தன் ஒழுக்கத்திலிருந்து வேறுபட்டு தனக்கான மரியாதையையும் தன்னுடைய நல்ல தன்மையிலிருந்தும் கீழோனகக் கருதப்படுவான். கள் உண்ணுவதால் இல்லற வாழ்க்கையிலும் பல சிக்கல்கள் ஏற்படும் எனவும், கள் உண்பவனால் இறைவனை முழுமையாக சேர முடியாது என்றும் கூறுகின்றன சமண முனிவர்களும் சமண சமயமும்.

**ஊன் உண்ணாமை :**

" புல்லா புலாலை நுகரும் புலையறை எல்லோரும் காண இயமன் தன் தூதுவர்
செல்லாகப் பற்றி தீவாய் நரகத்தின் மல்லாகத் தள்ளி மறித்துவைப்பாரே.

( திருமூலர் )

புலால் என்றால் இறைச்சி உணவு. இது உயிருக்கு துன்பம் தருவது. உடலுக்கு தீமை விளைவிப்பது. எனவே இதை பொல்லாப் புலால் என்கிறார் திருமூலர். தீயதான இந்த இறைச்சி உணவை விரும்பி

உண்ணும் கீழ் மக்களை, எமதூதர்கள் பலரும் காணப்பட்டு இழுத்துக் கொண்டு போய், அவர்கள் உடலை கரையான் போல அறித்துக் கொள்ள, பற்றி எரியும் நரக நெருப்பில் படுக்க தள்ளி புரட்டி எடுப்பார்கள் என புலால் உண்பவர்களுக்கு ஏற்படும் நிலையும் அவர்களால் மற்ற உயிர்க்கு ஏற்படும் கொடுமைகளையும் கூறியுள்ளார் திருமூலர். சமண முனிவர்களின் முதல் இல்லத்தாரின் ஒழுக்கமே கொல்லாமை ஆதலால் ஒரு உயிரைக் கொன்று சாப்பிடுபவர் மற்றவர்களின் உணர்வைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். இல்லற வாழ்க்கையில் உணர்வுகளை புரிந்து கொள்வது ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. கணவன் மனைவியிடையே உள்ள உணர்வை புரிந்து கொண்டால் இல்லற வாழ்க்கை அறத்தோடு செல்லும் என்கின்றனர். புலால் உண்பவர்களால் உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாத நிலையில் இல்வாழ்க்கையில் அறம் இருக்காது என்பதற்காகத்தான் சமணர்கள் ஊன் உண்ணாமையை ஓர் ஒழுக்கமாக கூறியுள்ளனர்.

**தேன் உண்ணாமை :**

சமணர்கள் தேன் உண்ணாமையையும் ஒரு அறமாக, ஒழுக்கமாகவும் சேர்த்துள்ளனர். ஏனென்றால் நாம் தேன் அடையில் இருந்து தேனை கொன்று அதிலிருந்து எடுப்பதால் இது சமணர்களின் முதல் ஒழுக்கத்திற்கே முரண்பட்டிருப்பதால் தேனை உண்ணக்கூடாது என்கிறார்கள். இதை இல்லத்தாரின் ஒழுக்கத்தோடு எவ்வாறு தொடர்புப்படுத்துவது என்றால் தேனீ என்னும் சிறு பூச்சியை கூடக் கொன்று அருந்தக்கூடாது என்றும் அதன் உழைப்பை நாம் திருடக்கூடாது என்றும் நினைக்கின்றனர். அதேபோல் தான் கணவன் மனைவி இடையே இல்லற வாழ்க்கையில் சிறு விஷயங்களையும் கவனித்து புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அடுத்தவரின் மனதை காயப்படுத்தக் கூடாது என்றும் அடுத்தவரின் உழைப்பையும் திருடக்கூடாது என்றும் தேன் உண்ணாமை மூலம் சமணர்கள் உணர்த்துகிறார்கள்.

**பெரியோரை வணங்குதல் :**

சமணர்கள் பெரியோரை வணங்குதலை ஒரு அறமாகவும் ஒழுக்கமாகவும் கொண்டுள்ளனர். ஏனென்றால் பெரியோரை வணங்குவதால் நமக்கு பல நன்மைகள் இருக்கின்றது என்று அவர்கள் நம்புகிறார்கள். இல்லற வாழ்க்கையில் மரியாதை என்பது முக்கியமான ஒன்றாகும் அது இல்லற வாழ்க்கைக்கு வழிவகுக்கும். பெரியோர்கள் என்றால் தீர்த்தங்கரர்கள் ஆவார்கள் அவர்கள் கூறிய ஒழுக்கங்களையும் அறத்தையும் பின்பற்றினால் இல்லற வாழ்க்கை நன்றாக அமையும் என்கிறார்கள் சமணர்கள்.

**முடிவுரை:**

நிறைவாக சமணர்கள் கூறிய இல்லற வாழ்க்கையின் ஒழுக்கங்களை நாம் இந்த ஆய்வு கட்டுரையில் அறிந்து கொண்டோம் இன்றைய வாழ்க்கைக்கு அது எவ்வாறு உதவும் என்றும் இன்றைய வாழ்க்கையில் அதை நாம் எவ்வாறு பின்பற்றலாம் என்பதையும் ஆராய்ந்து கூறுவது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம். அதற்கான ஒரு சிறிய சான்று தான் இந்த ஆய்வு கட்டுரையாகும்.

**மேற்கோள்கள் :**

1. “ கொல்லாமை யேஅறத்தின் கூரணி”
   i. (சீவகசிந்தாமணி அணியறுபது11)
2. “ பொய்யாமை பொய்யாமை ஆற்றன் அறம்பிற
   a. செய்யாமை செய்யாமை நன்று (297)
      i. ( 297 துறவறவியல் திருக்குறள்)
3. “பொய்கொலை களவு காம
4. மவிருள் புகாது போற்றிச்
5. செய்தவ நுனித்த சீலக்
6. கனைக்கதிர் திங்களொப்பர்”
   i. (சீவகசிந்தாமணி2824 முத்தி இலம்பகம்)
7. செம்மையொன் றின்றிச் சிறியாரினத்தராய்க். கொம்பை வரிமுளையாள் தோள்மரீஇ - உம்மை வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே - இம்மை அலியாகி ஆடிஉண் பார்.
   a. (நாலடியார் சமண முனிவர்கள் )
8. “அருளும் அரசனும் ஆணையும் தேரும் பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம் தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரின் மறுளும் பிணையவன் மாதவ மன்றே.”
   i. ( திருமூலர் 168)
9. “ காமமும் கள்ளும் கலதி கட்கே ஆகும் ( திருமூலர் 324)
   i. “ புல்லா புலாலை நுகரும் புலையறை எல்லோரும் காண இயமன் தன் தூதுவர் செல்லாகப் பற்றி தீவாய் நரகத்தின் மல்லாகத் தள்ளி மறித்துவைப்பாரே. ( திருமூலர் )

**துணைநூற்பட்டியல் :**

1. சமய பௌத்தம் சமயமும் தத்துவமும் - முனைவர் க.அன்பழகன்
2. சமண பௌத்த கிறிஸ்தவ இஸ்லாமிய இலக்கியங்கள் ( ஏப்ரல் 1997)
3. சமணத் தமிழ் இலக்கிய வரலாறு ( பிப்ரவரி 1961)
4. தமிழ் இணைய கல்வி கழகம் பண்பாட்டு வரலாறு ( ஆகஸ்ட் 5 2017)
5. திருமூலர் அருளிய திருமந்திரம் முதலாம் தந்திரம் செல்வம் நிலையாமை ( டிசம்பர் 11 ,2018)
6. தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் (பிப்ரவரி 12,2020)
7. தமிழ்ச் சமணர்களின் தமிழ்த் தொண்டு ( மே 31 , 2007)
8. சமணமும்தமிழும்(முதல்பாகம்) மயிலை சீனி. வேங்கடசாமி . (பிப்ரவரி 1959)
9. சமணக் கல்விப் பாடப்பொருள்( பிப்ரவரி 18 ,2021)
10. சமணம் ஜோசுவா ஜெ.மார்க் ( செப்டம்பர் 21,2020)
11. சமணரின் இல்லற ஒழுக்கம்! ஜூன் 1, 2015